PRIMARY SCHOOL

SECOND SEMESTRAL ASSESSMENT - 2013

TAMIL LANGUAGE - PAPER 2

PRIMARY 4

Name : ______________________ (      )

Class : Primary 4____                    Parents' Signature: ________________

14th Oct.

Total Time: 1 h 30 min

INSTRUCTIONS TO CANDIDATES

Do not open the booklet until you are told to do so.

Follow all instructions carefully.

Answer all questions.

Total Number of printed pages-

Name of Setter: St Anthony's Primary School

தொடக்கப்பள்ளி
ஆண்டிறுதித் தேர்வு - தமிழ் மொழி
தொடக்கநிலை நான்கு
தாள் 1 ( கட்டுரை )

மதிப்பெண்கள் _______ / **20** பெற்றோர் கையொப்பம் : ____________________












| | |
|---|---|
| வீட்டுக்கூடத்தில் | கழிவறைக்கு |
| பொருட்களைப் பெட்டிக்குள் | விளையாட்டுத்தனம் |
| நூல்கண்டு | வேலைக்கு நேரமாகிவிட்டது |
| செல்லப்பிராணி | கவனிக்காமல் |
| கடும் வயிற்று வலி | பெட்டிக்குள் வைத்து |

## 1. வேற்றுமை உருபு

**கோடிட்ட இடங்களை நிரப்புவதற்கு ஏற்ற சொல்லை கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களிலிருந்து தேர்ந்தெடு. அதன் எண்ணை அடைப்புக்குறிக்குள் எழுது.( 8 ம.பெ)**

ஆந்தை ஒன்று இரவெல்லாம் தூங்காமல் இரை தேடியது. அது பகலில் (1)____________ உறங்கிக்கொண்டிருந்தது. அப்போது ஒரு வெட்டுக்கிளி 'கீரிச், கீரிச்' என்று கத்தியது. அதனால் (2)____________தூங்கமுடியவில்லை.ஆந்தை 3)____________ அமைதியாக இருக்கச் சொன்னது. வெட்டுக்கிளி ஆந்தை சொன்னதைக் கேட்கவில்லை. அதனால் ஆந்தை வெட்டுக்கிளியை விழுங்கிவிட்டு (4)____________ உறங்கச் சென்றது.

Q1. (1) மரத்தில்

(2) மரத்தை

(3) மரத்தோடு

(4) மரத்துடன் ( )

Q2. (1) ஆந்தைக்கு

(2) ஆந்தையை

(3) ஆந்தையால்

(4) ஆந்தையுடன் ( )

Q3. (1) வெட்டுக்கிளிக்கு

(2) வெட்டுக்கிளியை

(3) வெட்டுக்கிளியால்

(4) வெட்டுக்கிளியுடன் ( )

Q4. (1) மகிழ்ச்சியால்

(2) மகிழ்ச்சிக்கு

(3) மகிழ்ச்சியில்

(4) மகிழ்ச்சியோடு ( )

2. செய்யுள் / பழமொழி

பின்வரும் செய்யுள்களில் / பழமொழிகளில் கோடிட்ட இடத்தை நிரப்புவதற்கு ஏற்ற சொல்லைத் தேர்ந்தெடுத்து அதன் எண்ணை அடைப்புக்குறிக்குள் எழுது.(10 ம.பெ)

Q5. உண்டிக்கு அழகு ______________ உண்டல்.

(1) உறவோடு

(2) சுவையோடு

(3) விருந்தோடு

(4) பலரோடு ( )

Q6. ______________ சிறுமையும் தான் தர வருமே.

(1) வறுமையும்

(2) பெருமையும்

(3) உடைமையும்

(4) பொறுமையும் ( )

Q7. எறும்பு ஊர ______________ தேயும்.

(1) மணலும்

(2) கல்லும்

(3) கரையும்

(4) பொறுமையும் ( )

Q8. நல்லிணக்கம் அல்லது ______________________.

(1) பாடாய் முடியும்

(2) கண்ணெணப்படுத்தும்

(3) பாடாய் படுத்தும்

(4) அல்லற்படுத்தும் ( )

Q9. ஐந்திலே ______________________ ஐம்பதில் வளையுமா?

(1) வளையாதது

(2) வளைந்தது

(3) வளர்ந்தது

(4) விளைந்தது ( )

3.முன்னுணர்வுக் கருத்தறிதல்

பின்வரும் பகுதில் 4 கோடிட்ட இடங்கள் உள்ளன. அவற்றை நிரப்புவதற்கு அடியில் கொடுக்கப்பட்டுள்ள சொற்களிலிருந்து மிகச் சரியான (8 ம.பெ)

| | |
|---|---|
| சாரதியின் பள்ளியில் தேசிய தினக் கொண்டாட்டம் நடைபெற்றது.மாணவர்கள் நிகழ்ச்சியைக் காணப் பள்ளி (Q10)__________ கூடினார்கள். முதலில் பள்ளி முதல்வர் எல்லோரையும் (Q11)__________ . பிறகு ஆசிரியர் திரு.குமார்சிங்கப்பூர் உருவான (Q12)__________ விளக்கினார். மாணவர்கள் கூர்ந்து கவனித்தனர். | 10.( ) 11.( ) 12.( ) |
| பிறகு, தேசிய தின நடனப்போட்டி தொடங்கியது. எல்லா வகுப்புகளிலிருந்தும் மாணவர்கள் போட்டிக்கு (Q12)__________ செய்யப்பட்டனர். சாரதியின் வகுப்பு முறை வந்ததும் சாரதியும் அவன் நண்பர்களும் மிகத் திறமையாக ஆடினர். எல்லோரும் பலத்த கைத்தட்டுக் கொடுத்தனர். | 13.( ) |

| | |
|---|---|
| (1) வரவேற்றார் | (2) பாடலை |
| (3) கதையை | (4) அழைத்தார் |
| (5) தேர்வு | (6) சிறந்த |
| (7) மண்டபத்தில் | (8)போட்டிக்கு |

## 4. தெரிவுவிடைக் கருத்தறிதல்

பின்வரும் பகுதியைக் கருத்தூன்றிப் படி

அன்பன் ஒரு தங்க மீன் வளர்த்து வந்தான். அவன் வீட்டில் ஒரு கருப்பு பூனையையும் வளர்த்தான். அன்பன் மீனை ஒரு கண்ணாடி தொட்டியில் போட்டு அதற்குத் தவறாமல் உணவு தந்தான். அன்பன் மீன்தொட்டியை வாரந்தோறும் சுத்தம் செய்வான். அன்பன் தன்னிடம் மிகுந்த அக்கறையுடன் இருப்பதை அறிந்த தங்க மீன் கர்வம் கொண்டது.

ஒரு நாள் சிறுவர்கள் சிலர் அன்பனின் வீட்டுக்கு அருகில் பந்து விளையாடிக்கொண்டிருந்தனர். திடீரென்று அவர்கள் உதைத்த பந்து கண்ணாடித் தொட்டியின் மீது பட்டது. தொட்டி கீழே விழுந்து உடைந்தது. மீன் தரையில் துடித்ததைக் கண்ட பூனை அதன் மேல் இரக்கம் கொண்டது. அது உடனே ஓடிச் சென்று அன்பனை அழைத்து வந்தது. அன்பன் மீனை வேறொரு தொட்டியில் போட்டான். மீன் உயிர் பிழைத்தது. கர்வம் கொள்வது தவறு என்று மீன் உணர்ந்தது. அன்றிலிருந்து அது பூனையுடன் அன்புடன் பழகியது.

**பின்வரும் வினாக்கள் மேற்கண்ட கருத்தறிதல் பகுதியையொட்டி அமைந்துள்ளன. ஒவ்வொரு வினாவிற்கும் ஏற்ற மிகப் பொருத்தமான விடையைத் தேர்ந்தெடு.அதன் எண்ணை அடைப்புக்குறிக்குள் எழுது.(10 ம.பெ)**

14. அன்பன் எவற்றை வளர்த்து வந்தான் ?

(1) சுறா மீனையும் அதன் குட்டியையும்

(2) கிளியையும் நாய்க்குட்டியையும்

(3) தங்க மீனையும் கருப்புப் பூனையையும்

(4) கிளியையும் கருப்புப் பூனையையும் ( )

15. தங்க மீன் ஏன் கர்வம் கொண்டது ?

(1) தம்பி அதற்கு உணவு கொடுத்ததால்

(2) அன்பன் அதனிடம் மிகுந்த அக்கறையுடன் இருந்ததால்

(3) அன்பன் அதனை மட்டும் வளர்த்து வந்ததால்

(4) அன்பன் அதனிடம் மிகுந்த அன்புடன் இருந்ததால் ( )

16. மீன்தொட்டி எப்படி உடைந்தது ?

(1) பூனை தொட்டியைத் தள்ளியதால்

(2) சிறுவர்கள் கம்பால் தொட்டியை அடித்ததால்

(3) அன்பன் தொட்டியை கீழே போட்டதால்

(4) சிறுவர்கள் உதைத்த பந்து கண்ணாடித் தொட்டியின் மேல் பட்டதால் ( )

17. இரக்கம் கொண்ட பூனை என்ன செய்தது ?

(1) அது சிறுவனை அழைத்து வந்தது

(2) அது “ மியாவ் மியாவ்” என்று கத்தியது

(3) அது அன்பனை அழைத்து வந்தது.

(4) அது மீனைத் தின்றது ( )

18. தங்க மீன் எதை உணர்ந்தது ?

(1) கர்வத்துடன் இருக்க வேண்டும் என்று

(2) கர்வம் கொள்வது சரி என்று

(3) கர்வம் கொள்வது தவறு என்று

(4) பூனையுடன் நட்புக்கொள்ளக்கூடாது என்று ( )

5.சுயவிடைக் கருத்தறிதல் (9 ம.பெ)
பின்வரும் கதையைக் கவனமாகப் படி. கீழே கொடுக்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுது.(9 ம.பெ)

பல ஆண்டுகளுக்கு முன் சீனாவில் ஒரு மூதாட்டி வாழ்ந்து வந்தார். அவருக்கு மூன்று பெண்கள் இருந்தனர். மூத்த இரண்டு பெண்களும் நாள்தோறும் நன்றாக உடுத்திக்கொண்டு இளவரசியைப்போல் இருந்தனர்.

ஆனால் மூன்றாவது பெண்ணாகிய சுவான், நாள்தோறும் உழைக்க வேண்டி இருந்தது. அவள் ஊர் எல்லையில் ஓடிக்கொண்டிருந்த ஆற்றின் அருகே வாத்துகளை மேய்த்து வந்தாள். ஆனால், அவள் வீட்டில் யாரும் அவளுடைய. உழைப்பை மதிப்பதில்லை. அவள் பழைய ஆடைகளையே அணிந்தாள். அவளுடைய இரு சகோதரிகள் சாப்பிட்டு வைத்த மீதி உணவையே சுவான் உண்பாள். அதுவும் வயிறு நிறைய கிடைப்பதில்லை. நாளடைவில் சுவான் மெலிந்து நோய்வாய்ப்பட்டாள்

அந்த ஊரில் வாழ்ந்த ஒரு வயதான பணக்கார தம்பதியினர் சுவானின் மீது இரக்கம் கொண்டு அவளைத் தங்களுடன் அழைத்துச் சென்றனர். சுவானை ஒரு நல்ல மருத்துவரிடம் அழைத்துச் சென்றனர். அவளுக்கு சுவையான உணவும் புதிய ஆடைகளையும் கொடுத்தனர். அவள் நோய் நொடியின்றி மகிழ்ச்சியுடன் வாழ்ந்து வந்தாள்.

19. முதாட்டி எங்கு வாழ்ந்து வந்தார்? (1 ம.பெ)

______________________________________________

______________________________________________

______________________________________________

20. முத்த இரண்டு பெண்களும் நாள்தோறும் என்ன செய்தனர்? (2 ம.பெ)

______________________________________________

______________________________________________

______________________________________________

21. சுவான் நாள்தோறும் என்ன செய்வான்? (2 ம.பெ)

______________________________________________

______________________________________________

______________________________________________

22. சுவான் நாளடைவில் ஏன் நலிந்து நோயுற்றான்? (2 ம.பெ)

______________________________________________

______________________________________________

______________________________________________

23. இறுதியில் சுவான் எப்படி மகிழ்ச்சியாக வாழ்ந்தான்? (2 ம.பெ)

______________________________________________

______________________________________________

______________________________________________

# P4
# TESTPAPER 2

ஆந்தை ஒன்று இரவெல்லாம்.........

1. 1 2. 3 3. 2 4. 4

5. 3 6. 2 7. 2 8. 4 9. 1

10. 7 11. 1 12. 3 13. 5

14. 3 15. 2 16. 4 17. 3 18. 3

19. மூதாட்டி சீனாவில் வாழ்ந்து வந்தார்.

20. நாள்தோறும் இரண்டு மூத்த பெண்களும் நன்றாக உடுத்திக்கொண்டு இளவரசியைப் போல் இருந்தனர்.

21. சுவான் நாள்தோறும் எல்லையில் ஓடிக்கொண்டிருந்த ஆற்றின் அருகே வாத்துகளை மேய்த்து வந்தான்.

22. சுவான் அவனது இரண்டு சகோதரிகளும் சாப்பிட்டு வைத்த மீத உணவை உண்டதோடு வயிறு நிறைய உணவு கிடைக்காததால் நலிந்து நோயுற்றான்.

23. அவ்வூரிலிருந்த ஒரு வயதான தம்பதியினர் சுவானைத் தங்களுடன் அழைத்துத் சென்று ஒரு நல்ல மருத்துவரிடம் காட்டினர். சுவானுக்கு சுவையான உணவும் புதிய ஆடைகளும் கொடுத்தனர். இவ்வாறு அவன் மகிழ்ச்சியாக வாழ்ந்தான்.